இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *7764/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 26055/2018)

விருதுநகர் இந்து நாடார்கள்
தர்ம பரிபாலன சபை மற்றும்
பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

தூத்துக்குடி கல்வி சமூகம்
மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. வி. இராமசுப்பிரமணியன்:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளையை நீக்கி, அரசமைப்பின் வகுமுறைக்கூறு *227*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் உத்தரவால் மனக்குறையுற்று, வாதிகள் இம்மேல்முறையீட்டுடன் வந்தனர்.

3. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஆர். ஆனந்த் பத்மநாபன் மற்றும் *1*-ஆம் மற்றும் *2*-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. விஜய் உறன்சாரியா ஆகியோர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

4. (i) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தை மாலை *5.00* மணியளவிலும் மற்றும் செயற்குழு கூட்டத்தை மாலை *5.30* மணியளவிலும் ஒரே நாளில் அதாவது *5.5.2018* அன்று ஆறாம் பிரதிவாதியால் (இம்மேல்முறையீட்டில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர்) கூட்டப்பட்டு, வழங்கப்பட்ட அறிவிப்பு சட்டத்திற்கு

புறம்பானது என்றதொரு விளம்புகைக்காகவும் (ii) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்தின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களை கூட்டுவதிலிருந்து 5-ஆம் மற்றும் 6-ஆம் பிரதிவாதிகளை தடுத்து நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான தீர்ப்பாணைக்காகவும் (iii) முதலாம் பிரதிவாதியான சங்கத்தின் வாழ்நாள் புரவலராக ஐந்தாம் பிரதிவாதியின் (இம்மேல்முறையீட்டில் மூன்றாவது எதிர்மேல்முறையீட்டாளர்) நியமனம் சட்ட விரோதமானது என்றதொரு விளம்புகைக்காகவும் (iv) முதலாம் பிரதிவாதியான சங்கத்தின் செயலாளராக செயல்படுவதிலிருந்து ஆறாம் பிரதிவாதியை (இம்மேல்முறையீட்டின் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர்) தடுக்கும் ஒரு நிரந்த உறுத்துக்கட்டளைக்காகவும் மற்றும் (v) உறுப்பினர்களின் பட்டியலைப் பெற்று, முதலாம் பிரதிவாதியான சங்கத்தின் அலுவலகப் பொறுப்பாளர்களின் தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தி, ஆணையரை நியமிப்பதற்காகவும் வேண்டி தூத்துக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களின் கோப்பிலுள்ள மு.வ. எண் 145/2018 என்ற உரிமை வழக்கை இதிலுள்ள மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்தனர்.

5. மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் உரிமையியல் வழக்குடன், 5.5.2018 அன்று பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தை கூட்டுவதிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர்களை தடுக்கும் இடைக்கால உறுத்துக்கட்டளைகோரி வழக்கிடை விண்ணப்பமான வ.வி. எண் 386/2018-ஐ தாக்கல் செய்தனர். 5-ஆம் மற்றும் 6-ஆம் பிரதிவாதிகள் முறையே புரவலராகவும், செயலாளராகவும் செயல்படுவதிலிருந்து தடுக்கும் உறுத்துக்கட்டளை ஒன்றைக்கோரி மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் ஒரு வழக்கிடை விண்ணப்பமான வழக்கிடை விண்ணப்பம் எண் 387/2018-ஐயும் தாக்கல் செய்ததாகத் தெரிகிறது.

6. உரிமை வழக்கு 23.4.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பம் 24.4.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டது எனத் தெரிகிறது. எதிர்வழக்காடும் பிரதிவாதிகள் 19 ஆவணங்களுடன் அடுத்தநாளே அதாவது 25.4.2018 அன்றே எதிர் ஆணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்தனர்.

7. ஆகவே, இருதரப்பு வாதங்களைக் கேட்டபிறகு, விசாரணை நீதிமன்றமானது, 5.5.2018 அன்று திட்டமிட்டவாறு பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தை நடத்த முற்படுவதிலிருந்து பிரதிவாதிகளைத் தடுத்தும், வழக்கிடை விண்ணப்ப எண் 386/2018-ஐ அனுமதித்தும், 26.4.2018 அன்று உத்தரவு பிறப்பித்தது. விசாரணை நீதிமன்றம் இருதரப்பின் வாதுரைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டதோடன்றி, வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட 12 ஆவணங்களையும் பிரதிவாதிகளின் எதிர் ஆணையுறுதி ஆவணத்துடன் தாக்கல் செய்யப்பட்ட 19 ஆவணங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

8. உறுத்துக்கட்டளை வழங்கிய விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவினை எதிர்த்து, வாழ்நாள் புரவலராக இருக்கவேண்டி கோரிக்கை செய்தவரான உரிமை வழக்கின் ஐந்தாம் பிரதிவாதி (இம்மேல்முறையீட்டில் மூன்றாவது எதிர்மேல்முறையீட்டாளர்), உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை XLIII விதி 1(ஆர்)-இன் கீழ் தூத்துக்குடியிலுள்ள சார்பு நீதிபதியின் கோப்பிலுள்ள உ.ப.மே. எண் 1/2018-இல் முறையான மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார். 1-ஆம் மற்றும் 6-ஆம் பிரதிவாதிகள் முறையே இதிலும் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள், முறையான மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு பதிலாக, இந்திய அரசமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 227-இன் கீழ்

மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை நீதியராயத்தின் கோப்பில் உ.சீ.ம. (எம்.டி.) (பி.டி.) எண் 1084/2018-இல் உரிமையியல் சீராய்வு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

9. இச்சட்டத்தின்படி மேல்முறையீடு பரிகாரம் கிடைக்கக்கூடியதன் அடிப்படையில் சீராய்வின் நிலைக்குந்தன்மைக்கு ஆட்சேபணைகள் இருந்தும், உயர் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளையை நீக்கறவு செய்து, உரிமையியல் சீராய்வு மனுவை அனுமதித்தது. அவ்வுத்தரவை எதிர்த்து வாதிகள் மேற்படி மேல்முறையீட்டுடன் வந்துள்ளனர்.

10. கீழமை நீதிமன்றங்களை சட்ட வரம்புக்குள் வைப்பதற்கு, உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பு அதிகார வரம்பைச் சுற்றிவரும் ஒருசில தீர்முடிவுகளின் அடிப்படையில், சீராய்வு நிலைக்குந்தன்மை குறித்து ஆட்சேபணையை உயர் நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட கோரப்பட்டது. விசாரணை நீதிமன்றம் 24.4.2018 அன்று தாக்கல் செய்யப்பட்ட உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதற்காகவும், 25.4.2018 அன்று வாதத்தை கேட்டதற்காகவும் மற்றும் 26.4.2018 அன்று உத்தரவைப் பிறப்பித்ததற்காகவும், உயர் நீதிமன்றம் குறைகூறியது. இது, உயர் நீதிமன்றத்தின் கருத்தின்படி, அவசரகதியாக நீதி வழங்கப்பட்டதன் விளைவாக அது புதைக்கப்பட்டுவிட்டது என்றதொரு வழக்காகும். ஆகவே, உயர் நீதிமன்றமானது சீராய்வை அனுமதித்து உறுத்துக்கட்டளையை நீக்கறவு செய்தது.

11. எங்களது பார்வையில், உயர் நீதிமன்றமானது, முதன்மையாக, அதே உறுத்துக்கட்டளையை எதிர்த்து உரிமை வழக்கிலுள்ள ஐந்தாம் பிரதிவாதியின் (இதிலுள்ள மூன்றாம் எதிர்மேல்முறையீட்டாளர்) வேண்டுகோளின்படி, சட்டத்தின் கட்டளை XLI, விதி 1(ஆர்)-இன் கீழ் தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் உ.ப.மே. எண் 1/2018-இல் ஏற்கெனவே

மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்ற பொருண்மையை கவனிக்காமல் தவறிழைத்துவிட்டது. ஆகவே வகுமுறைக்கூறு 227-இன் கீழ் கண்காணிப்பு அதிகாரவரம்பை துணைகொள்வது நியாயமல்ல என்பதாகும்

12. இரண்டாவதாக, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் 1908-இன் கட்டளை XLIII, விதி 1(ஆர்) உடனிணைந்த பிரிவு 104(1)(i)-இன் கீழ் ஒரு மேல்முறையீட்டிற்கான பரிகாரம் நேரடியாக கிடைக்கிறபோது, 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அதன் உதவியை நாடிச்சென்றிருக்கவேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் கவனித்திருக்கவேண்டும். மேல்முறையீட்டிற்கு கிடைக்கும் பரிகாரம் உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பு அதிகார வரம்பைச் செலுத்துவதற்கு எப்பொழுதுமே ஒரு தடையாக இருக்கலாகாது என்பது உண்மை. எ. வெங்கடசுப்பையா நாயுடு -எதிர்- எஸ். செல்லப்பன்[1] மற்றும் பலர் என்ற வழக்கில், "உயர் நீதிமன்றத்தின் அரசமைப்பு அதிகாரத்தைச் செலுத்துவதற்கு எதிராக தடை ஏதும் செய்ய இயலாது என்றபோதிலும், தரப்பினர் அரசமைப்பு பரிகாரத்தை நாடுவதற்கு முன்பு, அத்தகைய பரிகாரங்களை அவரே பயன்படுத்திக்கொள்ள உயர் நீதிமன்றம் பணிக்கவேண்டும் என்பது நீதிமுறை அங்கீகாரத்தைப்பெற்ற நன்கு அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடாகும்."

13. ஆனால், (i) உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் வகுமுறைகளின்படி, உரிமையியல் நீதிமன்றங்களில் அத்தகைய மாற்றுப் பரிகாரம் கிடைக்கக்கூடிய வழக்குகள் மற்றும் (ii) சிறப்பு சட்டங்கள் மற்றும்/அல்லது சட்ட விதிகளின்கீழ் அத்தகைய மாற்றுப் பரிகாரம் கிடைக்கக்கூடிய வழக்குகள் மற்றும் நீதிமுறைச் சார்புடைய அதிகாரிகளும்,

---

1. (2000) 7 எஸ்.சி.சி. 695

தீர்ப்பாயங்களும் ஆக இருக்கநேரிடும் அதில் வகைசெய்யப்பட்டுள்ள மன்றங்கள் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை நீதிமன்றங்கள் எப்போதும் மனதிற்கொள்ளவேண்டும். உரிமையியல் நீதிமன்றங்களிலுள்ள உரிமை வழக்குகளும், பிற வழக்கு நடவடிக்கைகளும் அடங்கியுள்ள முதல் வகையின்கீழ் வரக்கூடிய வழக்குகளைப் பொறுத்தவரை, உ.வி.மு.ச.-த்தின் வகையங்களின்படி, மேல்முறையீட்டு பரிகாரம் கிடைக்குந்தன்மையை முற்றிலும் ஒரு தடையாக பொருள்கொள்ளப்படலாம். மற்றபடி, ஓர் உரிமை வழக்கில், ஒரே காரணங்களின்பேரில் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை துணைகொண்டு, ஒரு தீர்ப்பாணை பிறப்பித்திருந்தாலுங்கூட, எவரோ ஒருவர் வகுமுறைக்கூறு 227-இன்கீழ் சீராய்வு ஒன்றை எதிர்க்கும் அபாயம் உள்ளது. இதனால்தான், இந்நீதிமன்றத்தில் மூவரமர் நீதியராயமானது, சூர்ய தேவ் இராய் -எதிர்- இராம் சுந்தர் இராய்[2] என்ற வழக்கின் முடிவை நிராகரித்த அதேவேளையில், இராதே உழியாம் -எதிர்- சப்பி நாத்[3] என்ற வழக்கில் "உரிமையியல் நீதிமன்றத்தின் உத்தரவுகள், அதிகாரிகளின் அல்லது தீர்ப்பாயங்களின் அல்லது நீதித்துறை/உரிமையியல் நீதிமன்றங்கள் அல்லாத நீதிமன்றங்களின் உத்தரவுகளிலிருந்து மாறுபட்ட நிலையிலுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

14. ஆகையால், வழக்கு நடவடிக்கைகள் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கீழானவையாக இருந்து, மன்றம், உரிமையியல் நீதிமன்றமாக இருக்குமிடமெல்லாம் உ.வி.மு.ச.-இன் கீழ் கிடைக்கத்தக்க பரிகாரமானது, அரசமைப்பின்கீழ் அதனுடைய கண்காணிப்பு அதிகாரத்தைச் செலுத்துவதிலிருந்து சுய-தடைவிதிப்பு

---

2. (2003) 6 எஸ்.சி.சி. 675
3. (2015) 5 எஸ்.சி.சி. 423

நடவடிக்கையாக இருப்பதோடல்லாமல் ஒழுக்கம் மற்றும் பகுத்தறிவு குறித்த விசயத்திலும் உயர் நீதிமன்றத்தை தடுக்கும். எனவே, ஒரு குறிப்பிட்ட மேல்முறையீட்டுப் பரிகாரம், உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கீழாகவே வகைசெய்யப்பட்டிருக்கின்ற குறிப்பிட்டதொரு வழக்கில், வகுமுறைக்கூறு 227-இன் கீழ் சீராய்வை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது.

15. இதிலுள்ள இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரான திரு. எ. இராஜேந்திரன் என்பவர் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்தின் செயலாளராக செயற்படுவதிலிருந்து ஏற்கெனவே சார்பு நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டார் என்பது உயர் நீதிமன்றத்தால் கவனிக்கத்தவறிய மற்றுமோர் அம்சமாகும். முதலாவது எதிர்மேல்முறையீட்டாளராலும், சங்கத்தாலும் இதிலுள்ள இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளராலும் உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் சீராய்வு தாக்கல் செய்யப்பட்டது என்பது பதிவுருகளிலிருந்து தெரிகிறது. இதிலுள்ள இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் சீராய்வு மனுவில் இரண்டாம் மனுதாரர் என்பதோடன்றி, அவர் உயர் நீதிமன்றத்திலுள்ள உரிமையியல் சீராய்வில், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர்-சங்கத்திற்கு அதனுடைய செயலாளராக சார்பாற்றவும் கோரப்பட்டார்.

16. ஆனால், இதிலுள்ள மேல்முறையீட்டாளர்களால் (உரிமை வழக்கிலுள்ள வாதிகள்) தாக்கல் செய்யப்பட்ட தொடர்புடைய உரிமையியல் பல்வகை மேல்முறையீடு எண் 7/2018-இல் தூத்துக்குடி சார்பு நீதிமன்றமானது, முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்தின் செயலாளராக செயற்படுவதற்காக இதிலுள்ள இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை தடுத்து 22.4.2018-ஆம் தேதியிட்ட உத்தரவொன்றைப்

பிறப்பித்தது. இம்மேல்முறையீடானது, இதிலுள்ள இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் செயலாளராக செயல்படுவதிலிருந்தும், மற்றொரு நபர் புரவலராக செயல்படுவதிலிருந்தும் தடுப்பதற்காக இதிலுள்ள மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிடை விண்ணப்பமான வ.வி. எண் 387/2018-ஆனது விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதிலிருந்து எழுந்ததாகும். விசாரணை நீதிமன்றமானது வ.வி. எண் 387/2018-ஐ தள்ளுபடி செய்தது, ஆனால் வாதிகள் உரிமையியல் பல்வகை மேல்முறையீடு எண் 7/2018-இல் மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்தனர். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை செயலாளர் பதவியிலிருந்து நீக்கி, இது, தூத்துக்கடி, சார்பு நீதிமன்றத்தால் 22.4.2018-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவினால் அனுமதிக்கப்பட்டது. உ.ப.ம. எண் 7/2018-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, உ.சீ.ம. (எம்.டி.) எண் 1295/2019 என்ற சீராய்வில் எதிர்த்துரைக்கப்பட்டு, அதுகாறும் உள்ளநிலை உத்தரவு மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்விடமிருந்து பெறப்பட்டது என இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் அவருடைய எதிருரையில் கோரியிருந்தாலும், அது ஒரு வருடத்திற்கும் மேலானபிறகே நிகழ்ந்தது. ஆகவே, உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் சீராய்வான உ.சீ.ம. (எம்.டி.) எண் 1084/2018-ஐ முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர்-சங்கம் தாக்கல் செய்த தேதியன்று, இதிலுள்ள இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் செயலாளராக இல்லை மற்றும் சங்கத்தின் சார்பாக செயல்பட்டிருக்க முடியாது. இந்த அம்சத்தையும் உயர் நீதிமன்றம் கவனிக்கத்தவறிவிட்டது.

17. விசாரணை நீதிமன்றம் மிக அவசரகதியாக செயல்பட்டது என்ற உயர் நீதிமன்றத்தின் கருத்துரையானது, கடுமையானதாகத் தெரிகிறது. 24.4.2018 அன்று உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது என்பது உண்மையென்றாலும்

1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பேரார்வத்துடன் இல்லையெனினும், மிகவும் விழிப்புணர்வுடன் இருந்ததால், 25.4.2018 அன்று உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பத்திற்கு எதிராணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்ததோடன்றி, 19 ஆவணங்களையும் தாக்கல் செய்தனர். அவர் வாதங்களை முன்வைத்த பிறகே அதைப் பரிசீலித்து விசாரணை நீதிமன்றம் 26.4.2018 அன்று உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

18. எதிர்த்தரப்பினருக்கு அறிவிப்பின்றி உறுத்துக்கட்டளை வழங்கப்படும்போதெல்லாம் 30 நாட்களுக்குள்ளாக உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பத்தை முடிக்க உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை XXXIX, விதி 3(அ) கட்டளையிடுகிறது. இவ்வழக்கில், விசாரணை நீதிமன்றமானது, ஒருசார்பான உறுத்துக்கட்டளை வழங்காமல், ஆவணங்களுடன் எதிராணையுறுதி ஆவணத்தை(ங்களை) தாக்கல் செய்ய எதிர்த்தரப்பினரை அனுமதிக்க விரும்பியது, பிறகு உறுத்துக்கட்டளைக்கான மனுவை அனுமதிப்பதற்கு முன்பு எதிர்த்தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டது. விரைந்து தீர்வு செய்தல் மற்றும் விரைவாக அனுப்பிவிடுதல் ஆகியவற்றுக்கிடையேயான எல்லையை வரையறுக்கும் கோட்டை, துல்லியமான கணக்கீட்டுடன் கண்டறிவது சாத்தியமில்லை. எவ்வாறாயினும், விசாரணை நீதிமன்றமானது அவசரகதியாக செயல்பட்டது என உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருந்தாலுங்கூட, உயர் நீதிமன்றம் வழக்கை திருப்பியனுப்பியிருக்கவே வேண்டும். ஆனால் உயர் நீதிமன்றமானது தகுதிப்பாட்டில் அடிப்படையில் ஏதொரு காண்முடிவையும் பதியாமல் உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பத்தை அனுமதித்துவிட்டது. உண்மையிலேயே, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவானது, எதிரெதிர் வாதங்களை விவாதித்து, வாதுரைகளையும், ஆவணங்களையும் உரியமுறையில் பரிசீலனை செய்தபிறகு

தகுதிப்பாட்டின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட ஒன்றாகும். விசாரணை நீதிமன்றத்தின் தீர்மானத்தை மாற்றியமைக்க உயர் நீதிமன்றமானது துரதிருஷ்டவசமாக, வழக்கை தகுதிப்பாட்டின் அடிப்படையிங்கூட விவாதிக்கவில்லை. ஆகவே, உயர் நீதிமன்றத்தின் உத்தரவானது இரத்து செய்யப்படுவதற்குரியது மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவானது மீட்டளிக்கப்படுவதற்குரியதாகும்.

19. உயர் நீதிமன்றமானது 28.8.2018-ஆம் தேதியிடப்பட்ட அதனுடைய உத்தரவின் மூலம் உரிமையியல் சீராய்வு மனுவை அனுமதித்த பிறகு, இதிலுள்ள இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் பொதுக்குழு கூட்டத்தையும், 25.9.2018 அன்று செயற்குழு கூட்டத்தையும் கூட்டியதுடன் தேர்தலையும் நடத்தினார். அறிவிப்பு உத்தரவிடப்பட்டு 8.10.2018 அன்றுதான் மேற்படி சிறப்பு அனுமதி மனுவில் அதுகாறும் உள்ளநிலையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே, மேற்படி மேல்முறையீடானது நடைமுறையில் பயனற்றதாகிவிட்டது என வாதிடப்பட்டிருக்கவேண்டும்.

20. சாதாரண சூழ்நிலையில் இதை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கக்கூடும். ஆனால், ஒவ்வொரு பொதுக்குழு கூட்டத்தின்போதும், முதலாவது எதிர்மேல்முறையீட்டாளர்-சங்கத்திற்கு தேர்தல் நடத்த முயற்சிசெய்கிற ஒவ்வொரு முறையும் மூன்று வெவ்வேறு மன்றங்களான (i) உரிமையியல் நீதிமன்றங்கள் (ii) சங்கங்களின் பதிவாளர் (iii) உயர் நீதிமன்றம் (சங்கத்தின் பதிவாளர்கள் உத்தரவுகளிலிருந்து எழும் நீதிப்பேராணை மனுக்களில்) ஆகியவற்றில் தொடர்ச்சியாக வழக்குகளை தாக்கல் செய்ததாகத் தெரிகிறது. இதை பின்வரும் அட்டவணையிலிருந்து காணலாம்:

வரிசை எண்	வழக்கிடுவதற்கு காரணமான நிகழ்வுகள்	வழக்கின் தன்மை	எந்த மன்றத்திடம் தாக்கல் செய்யப்பட்டது	தகுதிநிலை
1.	21.3.2015 அன்று பொதுக்குழுவையும் செயற்குழுவையும் கூட்டிய அறிவிப்பு	உ.வ. எண் 79/2015-இல் உரிமை வழக்கு	சார்பு நீதிமன்றம், தூத்துக்குடி	நீதிமன்றத்திடம் வாக்குறுதி அளித்திருந்தும், கூட்டம் நடத்தப்பட்டு அலுவலக பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.
2.	27.3.2015-ஆம் தேதியிடப்பட்ட செயல்முறை ஆணை மூலம் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் நடத்தப்பட்டுவரும் கல்லூரியின் கல்லூரி குழுவிற்கு செயலாளராக இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் நியமிக்கப்பட்டார். இது 21.3.2015 அன்று நடத்தப்பட்ட தேர்தலின்படியானதாகும்.	நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 3869/2016	மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு	நிலுவையில் உள்ளது.
3.	புதிய தொகுப்பு அலுவலக பொறுப்பாளர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்காக தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டத்தின்படியாக படிவம் எண்கள் 6 மற்றும் 7-இன் கீழ் வனையப்பட்ட விதிகளும் சங்கங்களின் பதிவாளரிடம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலக பொறுப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், பதிவாளர் இந்த படிவங்களை 24.4.2005 அன்று நிராகரித்துவிட்டார்.	நிராகரித்ததை எதிர்த்து நீ.பே.ம. (எம்.டி.) எண் 19710/2015 என்ற ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது	மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு	நிலுவையில் உள்ளது.

வரிசை எண்	வழக்கிடுவதற்கு காரணமான நிகழ்வுகள்	வழக்கின் தன்மை	ஏந்த மன்றத்திடம் தாக்கல் செய்யப்பட்டது	தகுதிநிலை
4.	21.3.2015 அன்று தேர்தல்கள் நடத்தப்பட்டன	21.3.2015 அன்று நடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்ட தேர்தல் அறவே இல்லா நிலையது என்ற விளம்புகைக்காகவும், மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும் தற்போதைய 1-ஆம் மேல்முறையீட்டாளரால் மு.வ. எண் 21/2016 என்ற உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூத்துக்குடி	நிலுவையில் உள்ளது
5.	புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகப் பொறுப்பாளர்கள் துணை விதிகளை திருத்தக் கோரினர். திருத்தமானது மாவட்ட பதிவாளரால் நிராகரிக்கப்பட்டது.	மாவட்ட பதிவாளரின் உத்தரவை எதிர்த்து நீதிப்பேராணை மனு நீ.பே.ம. (எம்.டி.) எண் 13144/2016 தாக்கல் செய்யப்பட்டது	மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு	நிலுவையில் உள்ளது.
6.	8.7.2017 அன்று பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தை கூட்டுவதற்கு 10.6.2017-ஆம் தேதியிட்ட ஒரு புதிய அறிவிப்பு வழங்கப்பட்டது.	அறிவிப்புகள் அறவே இல்லா நிலையது என்ற விளம்புகையைக்கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைக்காகவும் 1-ஆம் மேல்முறையீட்டாளரால் மு.வ. எண். 195/2017 என்ற உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூத்துக்குடி	உரிமை வழக்கு நிலுவையில் உள்ளது.
7.	12.4.2018-ஆம் தேதியிடப்பட்ட செய்தித்தாள் வெளியீடு மூலம் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் 5.5.2018 அன்று பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தைக் கூட்டினார்.	மேலே கூறப்பட்ட பரிகாரங்களுக்காக மு.வ. எண் 145/2018 என்ற உரிமை வழக்கு (இதன்மூலம் தற்போதைய மேல்முறையீடு எழுந்துள்ளது) தாக்கல் செய்யப்பட்டது.	மாவட்ட உரிமையியல் நீதிபதி, தூத்துக்குடி	நிலுவையில் உள்ளது.

21. ஆகவே, பல்வேறு மன்றங்கள் முன்பாக உள்ள தரப்பினர்களிடையேயான அனைத்து வழக்குகளையும் முடிவிற்கு கொண்டுவரும் ஒரே வழி, எதிர்ப்புக்குள்ள உத்தரவையும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தல்களையும் இரத்துசெய்து, அலுவலக பொறுப்பாளர்களின் தேர்தலுக்காக பொதுக்குழுவையும், செயற்குழுவையும் கூட்ட வழக்குரைஞர் ஆணையரை நியமிப்பதே என்பது எங்களது கருத்தாகும். அதன்படி, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து நடத்தப்பட்டதாக சொல்லப்படும் தேர்தல்கள் இரத்துசெய்யப்படுகின்றன. எண் 1, 1-ஆவது தெரு, சிதம்பர நகர், தூத்துக்குடி-628 008-இல் வசித்துவரும் செல்வி எஸ். சொர்ணலதா, வழக்குரைஞர், வழக்குரைஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு பின்வருவனவற்றை செய்யுமாறு கட்டளையிடப்படுகிறது.

(i) இவ்வுத்தரவின் நகல் கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள், வழக்குரைஞர் ஆணையர் துணைவிதிகள்படி, முதலாவது எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்தின் செயற்குழுவிற்கும், பொதுக்குழுவிற்கும் உறுப்பினர்களை நியமிப்பதற்காக முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர்-சங்கத்தின் ஆதரவளிக்கும் குழுக்களுக்கு/சங்கங்களுக்கு கடிதங்களை அனுப்பவேண்டும்.

(ii) வழக்குரைஞர் ஆணையிடமிருந்து கடிதம் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்திற்கு பொதுக்குழு/செயற்குழுவிற்கு ஆதரவளிக்கும் குழுக்கள் தங்களால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பட்டியலை அனுப்பவேண்டும்.

(iii) நியமனங்கள் செய்யப்பட்ட நான்கு வாரத்திற்குள், வழக்குரைஞர் ஆணையர், பொதுக்குழு கூட்டத்தையும், செயற்குழு கூட்டத்தையும் கூட்டி, துணை விதிகளின்படி தேர்தல்களை நடத்தவேண்டும்.

(iv) வழக்குரைஞர் ஆணையர் தேர்தலை நடத்தியபிறகு, சங்கங்களின் பதிவாளரிடம் படிவ எண்கள் 6 மற்றும் 7 பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யவேண்டும். அத்தகைய படிவங்களைப் பதிவு செய்தலின்பொருட்டு, அது எதிரெதிர் குழுவினரின் வேண்டுதலின்படி ஏதொரு வழக்கின் வாதப்பொருளாகாது.

(v) வழக்குரைஞர் ஆணையருக்கு ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்வதோடு அவருக்கு ஊதியமாக ரூ.1,00,000/- முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான சங்கத்தால் செலுத்தப்படவேண்டும்.

(vi) தேர்தல்கள் நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்படும்வரையில், வழக்குரைஞர் ஆணையர். முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர்-சங்கத்தின் செயலாளராக கடமைகளை ஆற்றவேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. ரோஉறிண்டன் பாலி நாரிமன்

மாண்புமிகு நீதியரசர் திரு. வி. இராமசுப்பிரமணியன்

புது தில்லி,

03.10.2019.

.....

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."